# *சீர்காழி நகராட்சி*

## *2010–2011 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை.*

### *அமைப்பும் ஆட்சியும்*

### *1. அமைப்பு :*

சீர்காழி நகராட்சி 1.10.72 ம் ஆண்டு தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறையினரின் 29.9.72 ம் தேதிய 2086–வது எண் உள்ள அரசாணையின்படி 3ம் நிலை நகராட்சியாக அமைக்கப்பெற்றுள்ளது. பின் 2.8.1979ம் தேதிய 1911ம் எண் உள்ள அரசாணையின்படி இந்நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக 1.4.1980 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

சீர்காழி நகராட்சியில் 49.கைவிளாஞ்சேரி, 50.சீர்காழி, 52.தாடாளன்கோவில் ஆகிய மூன்று கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. இந்நகராட்சி மன்ற வருவாய் எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. இந்நகராட்சியின் பரப்பளவு 13.21 சதுர கிலோ மீட்டர்கள். 1991 ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்நகர் மன்றத்தின் மக்கள்தொகை 28,959 ஆக உள்ளது. இதில் ஆண்கள் 14760. பெண்கள் 14199 ஆகும். 2001–ம் ஆண்டின் மக்கள்தொகை 32228. ஆண் 16196, பெண் 16032.

### *2. உறுப்பினர்கள் :*

அரசாணை எண்.135 மற்றும் 136, ந.நி.கு.வ.துறை , நாள் 11.6.96 ன்படி உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக நிர்ணயித்து நகராட்சி தேர்தல் நிர்ணயிக்கப்பட்டது. 25.10.96 முதல் இருந்த நகர்மன்றம் 5ஆண்டு பதவி காலம் பூர்த்தியடைந்ததால் 18.10.2006 அன்று நகர்மன்ற தேர்தல் நடத்தப்பெற்று புதியதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 25.10.2006 அன்று பதவி ஏற்றனர்.

# தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விபரம்.

| வார்டு எண் | உறுப்பினரின் பெயர் |
|---|---|
| 1. | திரு கே.தமிழரசன் |
| 2. | திரு ஏ.கருணாமூர்த்தி |
| 3. | திருமதி ஆர்.லதா |
| 4. | திரு ஆர்.சேகர் |
| 5. | திருமதி டி.ஞானம் |
| 6. | திரு எம்.முகமது யாசீன் |
| 7. | திருமதி என்.தனவள்ளி |
| 8. | திருமதி பி.கற்பகம் |
| 9. | திருமதி பி.சாந்தினி |
| 10. | திரு எஸ்.சாமிநாதன் |
| 11. | திரு ஜி.முத்துக்குமார் |
| 12. | திருமதி ஜெ.கலைச்செல்வி |
| 13. | திரு க.காமராஜ் |
| 14. | திருமதி சூ.ராஜபான்சு |
| 15. | திரு ரா.மாரிமுத்து |
| 16. | திருமதி ஏ.தமிழ்செல்வி |
| 17. | திரு ஏ.பி.எஸ்.குமார் |
| 18. | திரு ஏ.நாகராஜன் |
| 19. | திரு வே.ராகவன் |
| 20. | திருமதி பா.சுபா |
| 21. | திரு அ.குகன் |
| 22. | திரு ஏ.இளையராஜா |
| 23. | திரு ஜி.நடராஜன் |
| 24. | திருமதி என்.ஜெயந்தி |

சீர்காழி நகராட்சி நகர்மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் 25.10.2006 முதல் பொறுப்பு ஏற்று பதவியில் இருந்து வருகிறார்கள்.

2006 ம் ஆண்டு 21.9.2006 தேதிய மாநில தேர்தல் ஆணையம் எண்.114 ன்படி உள்ளாட்சி நகர்மன்றத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்தல் 18.10.2006 ல் நடத்தப்பட்டு 24 நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய உறுப்பினர்களினால் தேர்வு செய்யப்பட்டு 25.10.2006 முதல் திருமதி பொ.சாந்தினி நகர்மன்ற தலைவராக இருந்து வருகிறார்.

25.10.2006 முதல் நகர்மன்றத்தலைவராக திருமதி பொ.சாந்தினி அவர்கள் பொறுப்பேற்றார். 25.10.2006 முதல் நகர்மன்றத் துணைத்தலைவராக 13வது வார்டை சேர்ந்த திரு க.காமராஜ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பு வகித்து வருகிறார்கள்.

16.11.2006 ம் தேதி வரி மற்றும் மேல்முறையீடு குழு உறுப்பினர்களாக 1. திருமதி ஆர்.லதா, 2) திருமதி பா.சுபா 3) திரு ஜி.முத்துகுமார் 4) திருமதி ராஜபான்சு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வருகிறார்கள்.

16.11.2006 ம் தேதி ஒப்பந்த குழு உறுப்பினராக திரு எம்.முகமதுயாசின் 6 வது வார்டு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வருகிறார்.

நியமனக்குழு உறுப்பினராக 21 வது வார்டைச் சார்ந்த திரு அ.குகன் 16.11.2006 தேதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகித்து வருகிறார்.

உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினராக செயல்பட 10.1.2007–முதல் ஆணையருக்கு அதிகாரம் வழங்கி தீர்மான எண். 12 ல் தீர்மானிக்கப்பட்டது.

***ஆணையர்:***

1.4.2010 முதல் 16.7.2010 முடிய திரு ஆர். மோகன் BSc ஆணையர் அவர்களும், 17.7.2010 முதல் 8.8.2010 முடிய டி. சம்மந்தம் மேலாளர் அவர்கள் ஆணையர் பொறுப்பு அவர்களும் 9.8.2010 முதல் 31.3.2011 முடிய திரு மு. சந்திரசேகரன் நகராட்சி ஆணையர் சீர்காழி நகராட்சி ஆணையராக பதவி வகித்து வந்தார்.

***மேலாளர் :***

திரு எம்.சம்மந்தம் மேலாளராக 1.4.2010 முதல் 28.2.2011 வரையிலும், மேலாளர் கூடுதல் பொறுப்பாக திரு ஜி. தங்கசாமி கணக்கர் 29.2.2011 முதல் 31.3.2011 வரையில் பதவி வகித்து வந்தார்.

***கூட்டங்கள் :***

மன்றத்தில் இயல்புக்கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வந்துள்ளது. மற்றபடி வேண்டும் போது இடையிடையேயும் அவசரக்கூட்டங்களும் நடந்தது. அறிக்கை ஆண்டில் 14 கூட்டங்கள் நடைபெற்றுள்ளது.

•

| | கூட்டங்கள் | முடிவு செய்த பொருட்கள் |
|---|---|---|
| சாதாரணக்கூட்டங்கள் | 9 | 164 |
| அவசரக்கூட்டங்கள் | 6 | 25 |
| சிறப்புக் கூட்டங்கள் | 1 | 1 |

## மன்றம் முடிவு செய்த பொருள்கள் :

அறிக்கை ஆண்டில் 190 பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் 243 பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளது. பொருள்கள் ஏதும் தள்ளி வைக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசின் ஒழுங்கு விதிகளின்படி நடைமுறைக்கூட்டங்கள் வழுவாமல் கடைபிடிக்கப்படுகின்றது.

**குழுக்கள் :**

திருத்தப்பட்ட 1920 ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 73ன் கீழ் நியமனக்குழுவும் மற்றும் ஒப்பந்தக்குழுவும் அமைக்கப்பட்டு மன்றத்தலைவர் குழுவின் தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

### கீழ்கண்ட குழுக்கள் அறிக்கையாண்டில் செயல்பட்டு வந்தன.

| வ.எண் | குழுவின் விபரம் | கூட்டங்கள் எண்ணிக்கை | நிறைவேறிய தீர்மானங்கள் | ஒத்திவைக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | ஒப்பந்தக்குழு | இல்லை | இல்லை | இல்லை |
| (2) | நியமனக்குழு | 2 | 2 | இல்லை |
| (3) | வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு | இல்லை | இல்லை | இல்லை |
| (4) | உள்ளூர் திட்டக்குழு | இல்லை | இல்லை | இல்லை |

## நிர்வாகம் :

அலுவலக நிர்வாகப்பிரிவு மற்றும் வரிவசூலிப்போர் ஆகியோர்களின் மொத்த சம்பளம் அறிக்கை ஆண்டில் ரூ. 16921876 சென்ற ஆண்டில் ரூ.44,65,602/– செலவு செய்யப்பட்டுள்ளது. நகர்மன்ற நிதியிலிருந்து ஊழியர்கள் மாநாடு போன்றவைகளுக்கு பணம் ஏதும் செலவிடப்படவில்லை. அரசினரால் அவ்வபோது அறிவிக்கப்படும் கூடுதல் அகவிலைப்படி நிலுவை இல்லாமல் அறிக்கை ஆண்டில் வழங்கப்பட்டது.

## தண்டனை :

இவ்வாண்டில் ஊழியர்களுக்கு தண்டனைகள் எதுவும் வழங்கப்படவில்லை.

**எழுதுபொருள்கள் மற்றும் படிவங்கள்:**

எழுதுபொருள்கள் மற்றும் படிவங்கள் செலவு இவ்வாண்டில் ரூ. 5,00,000/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ.ரூ.2,85,138/–செலவிடப்பட்டுள்ளது.

## *வழக்குகள் :*

31.3.2011 தேதியில் நீதிமன்றத்தில் பைசல் ஆகாமல் உள்ள வழக்குகள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகளை விரைவில் முடித்துதர ஏற்பாடுகளை செய்ய நகர்மன்ற வழக்கறிஞர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

| | |
|---|---|
| ஆரம்பத்தில் நிலுவை வழக்குகள் | 7 |
| அறிக்கை ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | 2 |
| மொத்த வழக்குகள் | 9 |

மேற்படி அறிக்கை ஆண்டில் முடிவுற்ற வழக்குகள் –, மீதி உள்ள வழக்குகள் –7

***நிலுவையாக உள்ள வழக்குகள் விபரம்:–***

***2004:–***

| | | |
|---|---|---|
| 1 | OS 196/04 | வரதராஜீலு VS சாவித்திரி அம்மாள் என்பவர்களுக்கு இடையே காம்பவுண்ட் தொடர்பாக நடைபெறும் வழக்கு. |
| 2 | OS 198/04 | முருகன் பூங்கா அருகில் கட்டப்பட்டுள்ள பாலம் குறித்து. |
| 3 | OS 311/04 | கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டிடம் கட்டப்படும் அடிமனை குறித்து வழக்கு. |

***2005:–***

| | | |
|---|---|---|
| 4 | OS 26/05 | ஜபருல்லா என்பவர் நடத்தி வரும் மாவு மில் குறித்து சரஸ்வதி என்பவரால் தொடரப்பட்ட வழக்கு |
| 5 | OS 78/05 | இந்திரா நகர் பிரிவில் உள்ள பூங்கா மற்றும் சாலையில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமணம் குறித்து துரைசிங்கம் என்பவரால் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு |
| 6 | OS 98/05 | நகராட்சிகளால், தமது அனுபவத்தில் உள்ள இடத்தில் பால்வாடி கட்ட உத்தேசம் செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மகாராணி என்பவரால் தொடரப்பட்ட வழக்கு. |

## *பொறியியல் பிரிவு :*

அறிக்கை ஆண்டில் நகராட்சி பொறியாளராக திரு என்.விஸ்வநாதன். எம்.இ., 1.4.2010 முதல் அறிக்கை ஆண்டு வரை நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வந்துள்ளார்கள். மேலும் தஞ்சை மண்டல பொறியாளர் அவர்களும் சீர்காழி நகராட்சி பொறியியல் சம்பந்தப்பட்ட பணிகளை மேலாய்வு செய்து வருகிறார்கள்.

சாலைகள் . பாலங்கள் , பரிசல்கள், கட்டிடங்கள் முதலியன

இந்நகருக்குள் இருக்கும் மயிலாடுதுறை –சிதம்பரம் சாலை. சீர்காழி–திருமுல்லைவாசல் சாலை வரை நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது/ இவைகள் நீங்கலாக கீழ்கண்ட விபரப்படியான சாலைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ/எண் | சாலையின் விபரம் | 2010 – 2011 அறிக்கை ஆண்டு முடிவில் | 2010 – 2011 அறிக்கை ஆண்டு ஆரம்பத்தில் | 2010 – 2011 அறிக்கை ஆண்டில் அமைக்கப்பட்டவை | 2010 – 2010 அறிக்கை ஆண்டி முடிவில் |
|---|---|---|---|---|---|
| | | (கி/மீ/) | (கி/மீ/) | (கி/மீ/) | (கி/மீ/) |
| (1) | சிமெண்ட சாலை | 6.729 | 6.729 | 11.538 | 18.267 |
| (2) | தார்சாலை | 40.698 | 40.698 | 1.200 | 30.360 |
| (3) | கப்பிச்சாலை (மெட்டல் சாலை) | 3.050 | 3.050 | | 2.252 |
| (4) | செம்பரான் சாலை (கல்) | 1.002 | 1.002 | | 0.600 |
| | | 51.479 | 51.479 | 12.738 | 51.479 |

சாலைகள் யாவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மனைப்பிரிவு சாலைகளால் சாலைகளின் நீளம் அதிகரித்துள்ளது. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் முறைப்படி செப்பனிடப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் சாலைகள் பராமரிப்புக்கு ரூ.51,50,000/– செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.28,65,000/– ஆகும்.

## *உபயோகித்த சரளையும் , தகுதியும் :*

கருங்கல் கற்கள் சிவப்பு கற்கள் (Latrite Metal) சாலைகள் பழுது பார்ப்பதற்கும், புதுப்பித்தலுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொந்தமாக சரளைக்கள் மலைப்பாறைகள் நகர்மன்றத்தில் இல்லை.

பேருந்து வண்டி வரிச்சட்டத்தின் படி (Toll compensation) இந்நகராட்சிக்கு மான்யம் ஏதும் வழங்கப்படவில்லை.

### *பாலங்களும், மதகுகளும் :*

நகரில் பாலங்களும், மதகுகளும் நல்ல நிலையில் உள்ளது.

### *ஓய்வு விடுதிகள் , சத்திரங்கள் , தண்ணீர் பந்தல்கள் :*

இந்நகராட்சிக்குச் சொந்தமான வழிச்செல்வோர் தங்கும் விடுதி, தண்ணீர் பந்தல்கள் ஏதும் இல்லை. ஆனால் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற பணி (**Highways and**

**Rural works)** துறையினரால் தங்கும் விடுதி ஒன்றும் நகர எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## *சுகாதார குளியலறை மற்றும் கழிப்பிட வசதியுள்ள சுகாதார வளாகங்கள் (சமுதாய கழிப்பிடம் கட்டும் திட்டம் )*

சமுதாய கழிப்பிடம் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார வளாக திட்டம் ஆகியற்றின் கீழ் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள்:

| *திட்டத்தின் பெயர்* | *சுகாதார வளாகம்/ கழிப்பிட வசதி கட்டிடங்கள் விபரம்* | *மதிப்பீடு* | *பயன்பாட்டிற்கு வரப் பெற்ற நாள்* |
|---|---|---|---|
| 1.IHSDP | கீழதென்பாதி | ரூ.5.00 இலட்சம் | **2.3.2010** முதல் பயன்பாட்டில் உள்ளது |
| 2.IHSDP | கோவில்பத்து | ரூ.5.00 இலட்சம் | **2.3.2010** முதல் பயன்பாட்டில் உள்ளது |

## *மின் விளக்குகள்* :

31.3.2010 ல் கீழ்க்கண்டவாறு விளக்குகள் உள்ளது.

| *வ.எண்* | *விளக்குகள்* | *2008–2009* | *2007–2008* | *2006–2007* |
|---|---|---|---|---|
| (1) | சோடியம் வேப்பர் லைட்டுகள் | 716 | 500 | 500 |
| (2) | 40 வாட்ஸ் மின் டியூப் லைட்டுகள் | 1106 | 1302 | 1302 |
| (3) | 40 வாட்ஸ் சாதாரண விளக்குகள் | ---- | --- | --- |
| (4) | உயர்மின் கோபுர விளக்கு | 1 | 1 | 1 |
| *கூடுதல்* | | *1823* | *1800* | *1803* |

அறிக்கை ஆண்டில் மின் நுகர்வு கட்டணம் ரூ.22,66,734/– மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் வாங்கிட வில்லை மின் பணியாளர்களின் ஊதியம் ரூ.990,000/–ம் செலவினம் ஏற்பட்டுள்ளது.

பொது மக்கள் நேரத்தை அறிந்துகொள்ள வசதியாக காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சங்கு நாள்தோறும் ஐந்து முறைகள் காலை 5 மணி , 9 மணி, 1 மணி , 2 மணி மற்றும் இரவு 9 மணி ஆகிய நேரங்களில் ஒளிக்கப்பட்டு வருகிறது. இந்துக்களின் வசதிக்காக மார்கழி மாதத்திலும், முஸ்லீம்களின் வசதிக்காக ரம்சான் மாதத்தில் காலையிலும், மாலையிலும் சங்கு ஒலிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு தெரு விளக்கு கணக்கில் ரூ.22,66,734/– செலவு செய்யப்பட்டு உள்ளது. சென்ற ஆண்டு செலவு ரூ.17,79,773/– ஆகும்.

## *சீர்காழி நகராட்சி*

## *2010–2011 – திட்டப்பணிகள்*

**2009-2010** (ரூ.லட்சத்தில்)

| வ. எண் | | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு | செலவு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| **I** | | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2009-2010** | | | |
| | | 1) தியாகராஜர் நகரில் தார்சாலை அமைக்கும் பணி | 3.60 | 3.60 | பணி முடிவுற்றது |
| | | 2) வார்டு எண்.15 சிங்காரதோப்பு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| | | 3) சிங்காரதோப்பு சந்தில் சிமெண்ட் கான்கிரீட் அமைக்கும் பணி | 1.60 | 1.60 | பணி முடிவுற்றது |
| **II** | | **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாடு திட்டம் 2009-2010** | | | |
| | | 1) வார்டு எண்.23 அல்முகமதியார் தெருவிற்கு தார்சாலை அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| | | 2) வார்டு எண்.5 மேலமாரியம்மன்கோவில்தெருவில் தடுப்புசுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| | | 3) வார்டு எண்.2 கோவிந்தராஜ் நகர் ஆதிதிராவிடர் காலனி தெருவில் மினி வார்ட்டர் டேங்க் அமைக்கும் பணி | 1.00 | 1.00 | பணி முடிவுற்றது |
| | | 4) வார்டு எண்.6 இரணியன் நகரில் மினி வார்ட்டர் டெங்க் அமைக்கும் பணி | 1.00 | 1.00 | பணி முடிவுற்றது |
| **III** | | **கல்வி நிதி 2009-2010** | | | |
| | | 1) நகராட்சி ஊழியக்காரன்தோப்பு பள்ளிக்கு தளவாட பொருள்கள் சப்ளை செய்யும் பணி | 2.50 | 2.50 | பணி முடிவுற்றது |
| | | 2) நகராட்சி பனங்காட்டாங்குடி ரோடு நடுநிலைப்பள்ளிக்கு தளவாட பொருள்கள் சப்ளை செய்யும் பணி | 1.50 | 1.50 | பணி முடிவுற்றது |
| | | 3) நகராட்சி துறையூர் தொடக்கப்பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்யும் பணி | 1.30 | 1.30 | பணி முடிவுற்றது |
| | | 4) நகராட்சி வடக்குமடவிளாகம் பள்ளிக்கு தளவாட பொருட்கள் சப்ளை செய்யும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| | | 5) நகராட்சி ரயில்வே தோப்பு தெரு தொடக்கப்பள்ளியின் வளாகத்தில் சிமெண்ட் சான்கிரீட் தளம் அமைக்கும் பணி | 3.00 | 3.00 | பணி முடிவுற்றது |
| | | 6) கோவில்பத்து தொடக்கப்பள்ளிக்கு கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிக்குமிடம் கட்டும் பணி | 1.00 | 1.00 | பணி முடிவுற்றது |
| **IV** | | **12–வது நிதிக்குழுபணிகள் 2009-2010** | | | |
| | | 1) பி.எம்.ஆர் தெருவிற்கு தார்தளம் அமைக்கும் பணி | 2.00 | 2.00 | பணி முடிவுற்றது |
| | | 2) சுகாதாரபிரிவிற்கு 15 எண்ணிக்கை Try Cycle சப்ளை செய்யும் பணி | 2.78 | 2.78 | பணி முடிவுற்றது |
| | | 3) கணினி பிரிவிற்கு கணிப்பொறி மற்றும் பிரிண்டர் சப்ளை செய்யும் பணி | 1.79 | 1.79 | பணி முடிவுற்றது |
| | | 4) சர்வமான்ய தெருவிற்கு சிறுபாலம் கட்டும் பணி | 0.40 | 0.40 | பணி முடிவுற்றது |
| | | 5) திருக்கோலக்கா தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.85 | 0.85 | பணி முடிவுற்றது |
| | | 6) தேர்தெற்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 0.25 | 0.25 | பணி முடிவுற்றது |
| | | 7) VOC கிழக்கு தெருவில் (திட்டைரோடு) தடுப்பு சுவர் கட்டும் பணி | 0.50 | 0.50 | பணி முடிவுற்றது |
| | | 8) சுகாதார பிரிவிற்கு 33 எண்ணிக்கை மூன்று சக்கர வண்டிகள் சப்ளை செய்யும் பணி | 4.75 | 4.75 | பணி முடிவுற்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| V | | சுவர்ண ஜெயந்தி ரோஜகார் யோசனா 2009-2010 | | | |
| | | I) கோயில்பத்து பிள்ளையார்கோவில் தெருவிற்கு மழைநீர் வடிகால் கட்டும் பணி | 1.60 | 1.60 | பணி முடிவுற்றது |
| I | | எரிவாயுதகனமேடை அமைக்கும் பணி | 10.00 | -- | – – – – – |
| II | | எரிவாயுதகனமேடை அமைக்கும் பணி | 15.00 | -- | – – – – – |

***2010 –2011 :–***

**ஆரம்பக்கல்வி – கல்வி வசதிகள் :**

நகர்மன்ற எல்லையில் உள்ள மேல்நிலைப்பள்ளிகள் (தனியார்) 3
உயர்நிலைப்பள்ளிகள் ..... 2
நகராட்சி தொடக்கப்பள்ளி. ..... 6
நகராட்சி உயர்நிலைப்பள்ளி ..... 1
நகராட்சி மேல்நிலைப்பள்ளி ..... 2
தனியார் தொடக்கப்பள்ளி ..... 9
நடுநிலைப்பள்ளிகள். ..... 4
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் (மேல்நிலைப்பள்ளிகள்) (தனியார்) .. 2

நகராட்சி எல்லைக்குள் தனியார் மேல்நிலைப்பள்ளி ஒன்று பெண்களுக்காக மட்டுமே செயல்பட்டு வருகிறது. ஏனைய இரண்டும் இருபாலருக்குமானவை.

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த 9 பள்ளிகளும் 1.4.90 முதல் அரசு கல்வி துறையின் கீழ் மாற்றம் செய்யப்பட்டு அதன்படி செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் இரண்டு கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் தனியார் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டுவருகின்றது.

## *இட வசதியும் – தளவாடங்களும் :*

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த 9 பள்ளிக்கூடங்களில் 8 பள்ளிக்கூடங்கள் மட்டும் நகராட்சியில் சொந்தக்கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தாடாளன் முஸ்லீம் தெரு பள்ளி மட்டும் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு மாத வாடகையாக ரூ.9,800/– ம் மின்கட்டணமும் நகராட்சியினால் வழங்கப்படுகிறது. நகராட்சி பள்ளி கட்டிட பராமரிப்புகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## *மாண்புமிகு புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் :*

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் அறிக்கை ஆண்டிலும் அமுலாக்கப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.
2 வயது முதல் 4 வயதிலான குழந்தைகள் சத்துணவுத்திட்டம் கும்பகோணம் ஊட்டச்சத்து மையத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

5+ 9 பள்ளி சத்துணவு திட்டத்திற்கு 9 பள்ளி சத்துணவு அமைப்பாளர்களும், 9 சமையலர், 9 உதவியாளர்கள் என அமர்த்தப்பட்டுள்ளனர். மேற்படி பணி இடங்களில் சமையலர் பணியிடம் இரண்டும் உதவியாளர் பணியிடம் ஒன்றும் காலியாக உள்ளது. அமைப்பாளர் பி.அன்னமேரி 30.4.2011 பிற்பகல் முதல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றதால் பணியிடம் 1.5.2011 முதல் காலியாக உள்ளது.

தமிழ்நாடு அரசு சத்துணவு ( பள்ளி சத்துணவு மையங்களில் வேலைநாட்களில் 765 குழந்தைகளுக்கும் விடுமுறை நாட்களில் 262 குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது )

## ***ஆரம்ப கல்வி நிதி :***

சொத்துக்களின் மீது விதிக்கப்படும் சொத்துவரி ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் அரை ஆண்டிற்கு 2.5% கல்வி வரி வசூலித்து வரப்படுகிறது. கல்வி வரி மூலம் கிடைத்த வருமானம் ரூ.16,85,950/– ஆகும் . அறிக்கை ஆண்டில் வழங்கப்பட்ட மான்யம் எதும் இல்லை. சென்ற ஆண்டில் கல்வி வரி மூலம் ரூ. 16,91,385/– வசூலிக்கப்பட்டுள்ளது.

## ***உயர்தர கல்வி :***

இந்நகராட்சியால் உயர்நிலைப்பள்ளி ஒன்று தற்போது தரம்உயர்த்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்குறிப்பிட்டுள்ள தனியார் பள்ளிகள் போதுமானதாக உள்ளது.

1. எல்.எம்.சி மேல்நிலைப்பள்ளி
2. சியாமளா பெண்கள் மேல்நிலைப்பள்ளி .
3. சபாநாயகர் முதலியார் மேல்நிலைப்பள்ளி.
4. கிருஷ்ணமூர்த்தி முதலியார் நினைவு உயர்நிலைப்பள்ளி.
5. பெஸ்ட் மெட்ரிக்குலேஷன் மேனிலைப்பள்ளி
6. விவேகானந்தா மெட்ரிக்குலேஷன் மேனிலைப்பள்ளி

## ***கல்லூரி கல்வி:–***

இந்நகராட்சியில் கீழ்குறிப்பிட்டுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அறிக்கை ஆண்டில் இயங்குகின்றன.

1. பெஸ்ட் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி
2. விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி

அரசு இசை கல்லூரி ஒன்று இந்நகராட்சியில் இயங்கி வருகிறது.

***2010–2011 சீர்காழி நகராட்சி எல்லைக்குள் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை***

| பள்ளியின் பெயர் | ஆரம்பப் பள்ளி | | | நடுநிலைப்பள்ளி | | | உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1.தாடாளன் முஸ்லீம் பள்ளி | 23 | 16 | 39 | | | | | | |
| 2. தாடாளன் மேற்கு பள்ளி | 11 | 15 | 26 | | | | | | |
| 3. ஊழியக்காரன் தோப்புபள்ளி | | | | 72 | 77 | 149 | | | |
| 4. பனங்காட்டான் குடி சாலைப்பள்ளி | | | | 49 | 44 | 93 | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. பனமங்கலம் பள்ளி | *14* | *14* | *28* | | | | | | |
| 6. கோவில்பத்து பள்ளி | *40* | *32* | *72* | | | | | | |
| 7. துறையூர் பள்ளி | *19* | *19* | *38* | | | | | | |
| 8.புளிச்சக்காடுபள்ளி | *12* | *12* | *24* | | | | | | |
| 9. சீர்காழி நகரம் நடுநிலைப்பள்ளி | *66* | *56* | *122* | | | | *160* | *189* | *349* |
| 10. இராதா கிருஷ்ணன் துவக்கப்பள்ளி | | | | *56* | *55* | *111* | | | |
| 11.சபாநாயக முதலியார் இந்து துவக்கப்பள்ளி | *303* | *258* | *561* | | | | | | |
| 12.T.S.M.பள்ளி | *89* | *61* | *150* | | | | | | |
| 13.வாணிவிலாஸ் பள்ளி | *240* | *212* | *452* | | | | | | |
| 14. இந்து துவக்கப்பள்ளி | *62* | *73* | *135* | | | | | | |
| 15.சபாநாயக முதலியார் இந்து நடுநிலைப்பள்ளி | | | | *184* | *197* | *426* | | | |
| 16.குருஞான சம்பந்தர் இந்து நடுநிலைப்பள்ளி | | | | *184* | *166* | *350* | | | |
| 17.சபாநாயக முதலியார் இந்து மேனிலைப்பள்ளி | | | | | | | *2090* | *287* | *2377* |
| 18.எல்.எம்.சி. மேனிலைப்பள்ளி | | | | | | | *666* | *748* | *1414* |
| 19. சியமளா பெண்கள் மேல் நிலைப்பள்ளி | -- | | | – | | | – | *1678* | *1678* |
| 20.பெஸ்ட் மேல் நிலைப்பள்ளி | *468* | *372* | *840* | | | | *413* | *310* | *723* |
| 21. விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி | *1433* | *1315* | *2748* | | | | *987* | *839* | *1826* |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22.கிருஷ்ணமூர்த்தி முதலியார் உயர்நிலைப்பள்ளி | | | | – | – | – | *171* | *180* | *351* |
| 23.சமுதாய முதலியார் மெட்ரிக் பள்ளி | – | – | – | *764* | *634* | *1398* | – | – | – |
| 24.ஜெயின் ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | – | – | *183* | *169* | *352* | – | – | – |
| 25.சக்தி மெட்ரிக் பள்ளி | *57* | *35* | *92* | – | – | – | – | – | – |

## *பொது நூல் நிலையங்களும், படிப்பங்களும் :*

நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மூன்று பூங்காக்களிலும் நகர்மன்றத்தால் இலவச படிப்பகங்கள் மட்டும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மூன்று படிப்பங்களிலும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ் நாளிதழ் :** தினமணி, தினகரன், தினத்தந்தி, தினமலர், தமிழோசை மாலைமுரசு, மாலை மலர், தமிழ் முரசு.

மத்திய நூல் நிலையத்தின் கிளை நூலகம் நகரத்தில் இயங்கி வருவதால் தனியார் நூலகம் ஏதும் நடத்தப்படவில்லை.

## *நகரமைப்பு பிரிவு :*

இந்நகராட்சியில் கட்டிட அனுமதி, ஆக்கிரமிப்புகள், மனைப்பிரிவு பணிகள் நகரமைப்பு ஆய்வர் ஒருவரால் பார்க்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் திரு கு.அருள்செல்வன் சீர்காழி நகராட்சி நகரமைப்பு ஆய்வர் பணியினை வகித்து வருகிறார். அறிக்கையாண்டில் கட்டிட அனுமதிக்கோரி 185 மனுக்கள் வரப்பெற்றது. 132 மனுக்கள் அனுமதி அளிக்கப்பட்டது. 22 மனுக்கள் நிலுவையிலுள்ளது. அறிக்கையாண்டில் கடைத்தெரு, சாலை ஓரங்கள் ஆகிய இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகள் 2/3 எண்ணிக்கைகள் அகற்றப்பட்டது. கட்டிட உரிமகட்டணம் மூலம் அறிக்கையாண்டில் சென்ற ஆண்டு வரவு ரூ.581180/–

## *பொது சுகாதாரம் , மருத்துவ சிகிச்சை :*

நகர்மன்றத்தால் மருத்துவமனை ஏதும் நடத்தப்படவில்லை. அரசால் நடத்தப்படும் மருத்துவமனை மட்டும் இந்நகரில் உள்ளது. திரு என்.புகழேந்திரன் துப்புரவு அலுவலராக 1.4.2010 முதல் அறிக்கை ஆண்டு முடிய பணியாற்றி வந்துள்ளார்.

## தாய்சேய் நலமும், பிறப்பு விகிதமும் :

அறிக்கை ஆண்டில் நகராட்சியில் ஏற்பட்ட பிறப்பு ஏற்பட்டுள்ளது. நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு புதன் கிழமையும் குழந்தைகளுக்கு தடுப்பூசி அரசு மருத்துவமனையின் மூலம் இரண்டு முறையும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டும் திட்டத்தினால் கீழ்கண்ட விபரப்படி அரசு மருத்துவமனையில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

| | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 | 2009–2010 | 2010–2011 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரம் | 9730 | 1802 | 2136 | 1151 | 1713 | 1704 | 1480 | 1514 |
| குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கியது | 1764 | 2346 | 3375 | 1552 | 1648 | 2021 | 3716 | 3670 |
| காசநோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் | 1587 | 1344 | 1433 | 1258 | 1419 | 1135 | 1065 | 3670 |
| தடுப்பூசி ( தட்டம்மை ) போடப்பட்ட குழந்தைகள் | 456 | 360 | 706 | 439 | 574 | 416 | 570 | 1361 |
| முத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் | 1925 | 1768 | 1737 | 671 | 756 | 2021 | 2557 | 3231 |

## இறப்பு விகிதம் :

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 235 ஆகும். சென்ற ஆண்டு 209. அறிக்கை ஆண்டில் மக்கட் தொகையில் இறப்பு 6.86% (1000) சதவிகிதம் ஆகும். கடந்த ஆண்டு 6.81% (1000) சதவிகிதம் ஆகும்.

## பெரியம்மை :

பெரியம்மை ஒழிப்பு முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டதால், அம்மை நோய் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை. பிறப்பு இறப்பு பதிவு செய்ய தகுதி வாய்ந்த பயிற்சி பெற்ற துப்புரவு ஆய்வர் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

## வாந்திபேதி.

இவ்வாண்டு வாந்திபேதியினால் இறந்தவர் யாரும் இல்லை

**பிளேக் :** நகரில் இந்த வியாதியால் இறந்தவர் யாரும் இல்லை.

**என்டிரிக் காய்ச்சல்** : இல்லை.

***மலேரியா காய்ச்சல்*** : மலேரியா காய்ச்சலினால் இறந்தவர் யாரும் இல்லை

***மற்ற காய்ச்சல் :*** மற்ற காய்ச்சலினால் இறந்தவர் யாரும் இல்லை.

***மலேரியாவும் , கொசுத்தடுப்பும் :***

இத்திட்டம் நீண்ட காலமாக செயல்பட்டு வருகிறது. கொசு தடுப்பு மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொசுப்புகை மருந்தும் அடிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இத்திட்டத்திற்கு அறிக்கையாண்டில் ரூ.------------/- செலவு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு செலவு ரூ.----------- /-

***இடுகாடுகளும், சுடுகாடுகளும் :***

நகரில் 15 இடுகாடுகளும், சுடுகாடுகளும் உள்ளன. இவை அனைத்தும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நேரு வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் சுடுகாடுகளுக்கு சாலைகள் மற்றும் கூரைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன.

***சிறுசேமிப்பு :***

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 2010–2011ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறியீடு தொகை ரூ.61,75/–லட்சம். இதனில் இந்நகராட்சி ரூ.17,40/– சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டுள்ளது.

***சலவைத் தொழிலாளர்களுக்குரிய சலவைத்துறை வசதி :***

சலவைத் தொழிலாளர் நலனை முன்னிட்டு ஈசான்யத்தோப்பு தெருவில் இந்நகராட்சியால் சலவைத்துறை ஒன்று கட்டப்பட்டு அறிக்கை ஆண்டிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் உள்ள 10 சலவைத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

***சுகாதாரம் :***

அறிக்கை ஆண்டில் பணி புரிந்துள்ள துப்புரவு பிரிவு பணியாளர்கள் விவரம் வருமாறு.

1. துப்புரவு அலுவலர் – 1
2. துப்புரவு ஆய்வர் – 2
3. களப்பணி உதவியாளர் – 1 (காலியிடம்)
4. சுகாதார மேற்பார்வையாளர்கள் – 5
5. ஒட்டுநர்கள் – 3
5. துப்புரவு செய்பவர்கள் – 63
6. மலேரியா நோய்தடுப்பு
   பிரிவில் வேலை செய்பவர்கள் – 8 (காலியிடம் 5)

## *மல உரம் குப்பை அப்புறப்படுத்துதல் :*

மக்கும்குப்பை, கூளங்கள் முதலியவற்றை உபயோகித்து கம்போஸ்ட் எரு தயாரிப்பதற்கு ஏதுவாக இந்நகராட்சியில் 4.31.5 ஹெக்டர் அளவுள்ள குப்பைகள் சேமிப்பு இடம் இருக்கிறது. இந்நகர் மன்றத்தால் அறிக்கை ஆண்டில் கம்போஸ்டு தயாரிப்பு இல்லை மக்கும் உரம் கையிருப்பில் இல்லை. திடகழிவு மேலாண்மை திட்டத்திக்கீழ் எடமணல் கிராமத்தில் சீர்காழி நகராட்சி குப்பைகளை சேகரிக்கவும், உரம் தயாரிப்பதற்கும் புலஎண் 267/3ஏ–ல் 10.65 ஏக்கர் அளவுள்ள இடம் 5.33 இலட்சத்திற்கு வாங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2010– 2011 ம் ஆண்டிற்கு குறியீடு நிர்ணயிக்கப்படவில்லை.

## *அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் :*

1920ம் வருடத்திய சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249, 250வது பிரிவுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 1969ம் வருடத்திய உணவு கலப்படத் தடைச்சட்டத்தின் படி உணவுப்பொருள்கள் விற்பனைக்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன. உரிமையாணையின்றி தொழில் நடத்தப்படுவதை தடுப்பதற்கு அவ்வபோது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் 513 இனங்களுக்கும், உணவு கலப்பட தடைச்சட்டத்தின் படி 403 இனங்களுக்கும் உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் இந்த ஆண்டில் வருமானம் ரூ.1,72,718/– சென்ற ஆண்டு வருமானம் ரூ.1,73,617/– ஆகும். நகராட்சி எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் ஏதுமில்லை.

## *திருவிழாக்கள் :*

தருமபுர ஆதினத்துக்கு சொந்தமான அருள்மிகு சட்டநாதர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உற்சவம் நடைபெற்றது. இந்த திருவிழாவில் சுமார் 15,000 பேர் கூடினர். வழக்கம்போல் கோவிலுக்கு முன்னதாக பந்தல் அமைக்கப்பட்டது. தனியாக சிப்பந்திகளும், நவீன கழிப்பறை வசதியும், சிறுநீர் கழிப்பிட வசதியும் அமைக்கப்பட்டன. போதிய சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன.

## *குடிநீர் விநியோகம் :*

அறிக்கையாண்டில் நகரில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்கு 149 கைப்பம்புகள், ஆழ்குழாய் கிணறுகள் – 4 இதைத் தவிர தானே இயங்கும் பம்புகள் 13, இந்தியா மார்க் II கைப்பம்புகள் 15 ஆகியவைகள் இயங்கி வருகிறன்றன. பொதுமக்களுக்கு குடிநீர்விநியோகம் சித்தமல்லி தலைமைநீரேற்று நிலையத்திலிருந்து பம்பீங் முலம் பகிர்மான குழாய்கள் வழியாக தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கைப்பம்புகளை பராமரிக்கவும்

பிரஷர் பம்புகளை சரிபார்க்கவும், ஒரு பம்பு மெக்கானிக் அவருக்கு உதவியாக 3 குடிநீர் பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர் . தற்பொழுது உதவி பம்பு மெக்கானிக் பணியிடம் காலியாக இருக்கிறது. குடிநீர் விநியோகம் பணியை நகராட்சி பொறியாளர் கண்காணித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் மின்கட்டணம் செலுத்தியது, உபகரணங்கள் வாங்கியது, பணியாளர்கள் சம்பளம் உட்பட ரூ.807814/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ.3128548/–.

சித்தமல்லி குடிநீர் நீரேற்று தலைமை பணிமனையில் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தனியார் மயமாக்குதல் திட்டத்தின்கீழ் ஒப்பந்த பணி அடிப்படையில் மின்கம்பியாள் ஒருவர் உதவியாளர் ஒருவர் 1.5.2004 முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குடிநீர் விநியோக திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் கீழ்குறிபிட்டுள்ளபடி செலவினம் ஏற்பட்டுள்ளது.

*செலவு விபரம்:–*

| | | |
|---|---|---|
| 1 | பணியாளர்கள் ஊதியம் | ரூ.8,07,814/– |
| 2 | மின் நுகர்வு கட்டணம் | ரூ.3,98,376/– |
| 3 | டீசல் மற்றும் இதர செலவு | ரூ. /– |
| 4 | பராமரிப்பு பணிக்கு உபகரணங்கள் வாங்கியது | ரூ.4,00,000/– |
| 5 | தனியார் மயமாக்கும் பணியில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் நபர்களுக்கு கூலி வழங்கியது | ரூ. /– |
| 6 | டெலிபோன் செலவு | ரூ.5000/– |
| 7 | விளம்பரசெலவு | ரூ.5000/– |
| 8 | பராமரிப்பு செலவு | ரூ.5,00,000/– |
| 9 | பம்பு பராமரிப்பு செலவு | |
| | *மொத்தம்* | *ரூ. /–* |

## *சாக்கடை தொட்டி :*

இந்நகரில் திறந்த கட்டிட வடிகால்களோ அல்லது பாதாள சாக்கடைத் திட்டமோ இல்லை. திறந்தவெளி சாக்கடைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் சில இடங்களில் உள்ளது. இவைகளில் சாக்கடை நீரை தேங்காமல் அவ்வபோது பொதுசுகாதாரப்பணியாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளில்லாமல் தொட்டிகளில் நிரம்பியுள்ள சாக்கடை நீரை மினி டேங்கர் மூலம் அப்புறப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கழிவுநீர் கால்வாய் :

வடிகால் மொத்த நீளம் : 5.902 கி.மீ.

## *குடிநீர் வினியோகம் :*

நீர் ஆதாரம் :கொள்ளிடம் ஆறு சித்தமல்லி கிராமம்

| | | | |
|---|---|---|---|
| மேல் நிலை தொட்டிகள் அலுவலக வளாகம் பகுதி | : 12.00 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு | – | 1 |
| கீழ தென்பாதி | : 0.60 லட்சம் லிட்டர்கள் | – | 1 |
| கோவில்பத்து பகுதி | : 0.60 லட்சம் லிட்டர்கள் | – | 1 |
| பனமங்கலம் பகுதி | : 0.60 லட்சம் லிட்டர்கள் | – | 1 |
| துறையூர் பகுதி | : 0.60 லட்சம் லிட்டர்கள் | – | 1 |

| | |
|---|---|
| தினசரி வழங்கும் குடிநீர் அளவு | : 20 லட்சம் லிட்டர்கள் |
| குடிநீர் வழங்குதல் விபரம் | : தினசரி இரண்டு வேளை |
| பகிர்மான குழாய் நீளம் | : 48.688 கி.மீட்டர்கள் + 1.500 -50.188 |
| குடிநீர் பிரதானக் குழாய் நீளம் | : 16.00 கி.மீட்டர்கள் |
| குடிநீர் குழாய் இணைப்பு | : 486 எண்ணிக்கைகள் 523 |
| பொது குழாய்கள் | : 66 எண்ணிக்கைகள் |
| கைப்பம்புகள் (பிள்டர் பாயின்ட்) | : 173 எண்ணிக்கைகள் |
| இந்தியாமார்க் II கைபம்புகள் | : 15 எண்ணிக்கைகள் |
| விசை பம்புகள் | : 15 எண்ணிக்கைகள் + 8223 |

இந்த நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 62 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது, இந்நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் சீராகவும் முறையாகவும் செயல்பட்டு வருவதால் குடிநீர் தட்டுப்பாடு பிரச்சனைகள் ஏதுமில்லை,

| வாகனங்கள் : | | |
|---|---|---|
| *ஈப்பு* | : | **1** |
| குடிநீர் மினி டேங்கர் லாரி | : | **1 ( 4000** லிட்டர்) |
| குப்பை அள்ளும் லாரி | : | **4** |
| கழிவுநீர் அகற்றும் லாரி | : | **1 ( 4000** லிட்டர்) |

**நகராட்சி சொத்துக்கள் :**

| | | |
|---|---|---|
| அலுவலக கட்டிடம் | : | **1** |
| நகர்மன்ற கூடம் | : | **1** |
| சுகாதார வளாகம் | : | **6** |
| பூங்கா | : | **3** |
| மயானம் | : | **15** |
| பலன்தரும் மரங்கள் | : | **150** |
| கடைகள் | : | **103** |

| | | |
|---|---|---|
| வருடாந்திர ஏலகடைகள் | : | 15 |
| சாலைகளின் நீளம் | : | ________ கி.மீ |

## பள்ளி கட்டிடங்கள்

நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் .. 9 எண்ணிக்கை

எட்டு பள்ளிகள் நகராட்சி சொந்தமான கட்டிடத்திலும் ஒரு பள்ளி தனியார் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது,

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் அனைத்திலும் கீற்றுக்கொட்டகை மற்றும் எளிதில் தீப்பிடிக்கக்கூடிய கூறைகள் எதும் இல்லை.

## *பணியாளர்கள் விபரம் :*

### *பொதுப்பிரிவு :*

| | | |
|---|---|---|
| மேலாளர் | : | 1 |
| கணக்கர் | : | 1 |
| உதவி கணினி திட்ட அமைப்பாளர் | : | 1 |
| இளநிலை உதவியாளர் | : | 7 |
| தட்டச்சர் | : | 1 |
| பதிவறை எழுத்தர் | : | 1 |
| அலுவலக உதவியாளர் | : | 3 (காலியிடம் 2) |
| காவலர் | : | 1 |

### *பொறியியல் பிரிவு:*

| | | |
|---|---|---|
| பொறியாளர் | : | *1* |
| பணி மேற்பார்வையாளர் | : | *1* |
| ஓட்டுநர் | : | *1* |
| பூங்கா காவலர்கள் | : | *4 (காலியிடம் –1)* |
| விடுதி காவலர் | : | *1* |

### *தெரு விளக்குப் பராமரிப்பு:*

| | | |
|---|---|---|
| மின் கம்பியாளர் | : | *1 ( காலியிடங்கள்–1 )* |
| மின் கம்பி உதவியாளர் | : | *1* |

### *குடிநீர் விநியோகம்:*

| | | |
|---|---|---|
| பம்பு பிட்டர் | : | 1 |
| உதவி பம்பு பிட்டர் | : | *1* ( காலியிடம்) |
| குடிநீர் திட்ட காவலர் | : | *1* |
| குடிநீர் விநியோக கிளினர் | : | *2* |

### *வருவாய் பிரிவு:*

| | | |
|---|---|---|
| வருவாய் ஆய்வர் | : | *1* |
| வருவாய் உதவியாளர் | : | *7* |

### *பொது சுகாதாரப் பிரிவு:*

| | | |
|---|---|---|
| துப்புரவு அலுவலர் | : | *1* |
| துப்புரவு ஆய்வர் | : | *2* |
| சுகாதார மேற்பார்வையாளர் | : | *5* (காலியிடம் 1) |
| களப்பணியாளர் | : | *1* (காலியிடம் 1) |
| ஓட்டுநர் | : | *3* |
| துப்புரவு பணியாளர்கள் | : | *78* (காலியிடம் 15) |
| சமுதாய அமைப்பாளர் | : | *1* |

***சத்துணவு :***

| | | |
|---|---|---|
| உதவியாளர் மற்றும் கணக்கர் | : | *1* |
| சத்துணவு அமைப்பாளர் | : | *9 (காலியிடம் 1)* |
| சத்துணவு சமையலர் | : | *9(காலியிடம் 1)* |
| சத்துணவு உதவியர் | : | *9* (காலியிடம் 2) |

***பொன்விழா ஆண்டு திட்டங்கள் :***

சீர்காழி நகராட்சியில் (செவர்ண ஜெயந்தி) பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு, இன்று வரை பல பணிகள் செம்மையான முறையில் நடைபெற்று வருகின்றன அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

***1. சுயவேலை வாய்ப்புத்திட்டம்: (2010–2011)***

| | | |
|---|---|---|
| 2010–2011 ம் ஆண்டிற்கான மான்யம் | : | ரூ.1,53,000/– |
| கடன் தொகை | : | ரூ.3,36,400/– |
| பயனாளிகள் | : | 39 நபர்கள் |

***2. சிக்கனம் மற்றும் நாணய சங்கம்:***

| | | |
|---|---|---|
| 2010–2011ம் ஆண்டிற்கான தொகை | : | ரூ.38,298/– |
| பயனாளிகள் | : | 31 நபர்கள் (2 குழு உறுப்பினர்கள்) |

***3. 2010–2011 பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்:***

| | | |
|---|---|---|
| 2010–2011ம் ஆண்டிற்கான மான்யம் | : | ரூ.1,14,894/– |
| கடன் தொகை | : | ரூ.1,92,000/– |
| பயனாளிகள் | : | 22 நபர்கள் |

***4. சமுதாய கட்டமைப்பு பிரிவு***

2010–2011 ரு.76,596/– மகளிர் குழுவிற்கு ஊக்குனர் மற்றும் பிரதிநி பயிற்சி, விழிப்புணர்வு பேரணி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**5. நகர்ப்புற கூலி வேலை வாய்ப்பு திட்டம் (U.W.E.P)**

**2009-2010**

| வ.எண் | வழங்கபட்ட மான்யம் | முடிக்கப் பட்ட எண்ணிக்கை | பணி விபரம் |
|---|---|---|---|
| *1* | **ரூ.1,60,000/-** | **2** | தாடாளன் காமராஜபுரம் பிள்ளையார் கோயில் தெருவில் வடிகால் பாலம் அமைத்தல் |

## SJSRY Training *பயிற்சி:–*

| வ . எண் | பயிற்சி | ஆரம்பித்த தேதி | பயனாளிகளின் விபரம் | செலவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | A/C Mechanic | 22.3.2010 முதல் 24.11.2010 | 23 நபர்கள் | 229789/- |

### திடக்கழிவு மேலாண்மை திட்டம் :

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு அலுவலர் –1 துப்பரவு ஆய்வாளர் –2, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் –5, வாகன ஓட்டுனர்கள்–3 , துப்புரவு பணியாளர்கள் –63, ஆகியோர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

1.8.2004 முதல் இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 24 வார்டுகளில் திடக்கழிவுகள் அகற்றும் பணி தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் 18 வார்டுகள் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தனித்தனியாக துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பிரித்து சேகரிக்கப்பட்டு, மக்காத குப்பைகள் Land fill முறைப்படி குப்பை கொட்டும் இடத்தில் அப்புறப்படுத்தப்படுகிறது. மேற்படி பணிக்கு 15 எண்ணிக்கை மூன்று சக்கர வாகனங்கள் தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி சேகரம் ஆகும் திடக்கழிவு 10.9 mT மெட்ரிக் டன் ஆகும்.

### உரக்கிடங்கு :

இந்நகராட்சியின் அருகிலுள்ள எடமணல் பகுதியில் உரக்கிடங்கு அமைப்பதற்கு தேவையான 10.63 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது, கலவை உரம் தயாரிப்பதற்கு ஏதுவாக மேற்படி இடத்தில் அபிவிருத்திப் பணிகள் செய்யப்பட்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

### *மின்னணு ஆளுமை :*

நகராட்சிகளின் நிர்வாகத்தை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் II–ன் கீழ் இந்நகராட்சிக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன, அதன் மூலம்

1. பிறப்பு, இறப்பு பதிவுகள்
2. சொத்து வரி
3. குடிநீர் கட்டணம்
4. தொழில் வரி
5. புதிய கணக்கு முறை
6. அசையும் மற்றும் அசையா சொத்துகள்
7. கட்டிட அனுமதி வழங்குதல்
8. அச்சம் மற்றும் அருவருக்கதக்க உரிமம் வழங்குதல்
9. வாகனங்கள்

10. இருப்புகள்
11. விரியில்லா இனங்கள்
12. திடக்கழிவு மேலாண்மை
13. பணியாளர் மேலாண்மை

ஆகியவை கணினி மயமாக்கப்பட்டுள்ளன. சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை 01.08.2003ல் தொழில் வரி மற்றும் வரியில்லா இனம், 1.4.2004ல் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

## *மின் ஆளுமை* (e-governance)

### *தொடுதிரை* (Touch Screen)

இந்நகராட்சி அலுவலகத்தின் கணினி வசூல் மையத்தில் தொடுதிரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரிவரிப்புதாரர்கள் தாங்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டண பாக்கி, வரியில்லா இனங்கள் பாக்கி, தொழில் வரி பாக்கி போன்ற தகவல்களை தாங்களாகவே அறிந்து கொள்ள இயலும். மேலும் பொதுமக்கள் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விவரங்களை ஆங்கிலம், தமிழில் அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

### *இ–சேவை மையம்:*

இந்நகராட்சியில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட ஓர் இ–சேவை மையம் உள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் தாங்கள் நேரிடையாக வந்து சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, மற்றும் வரியில்லா இனங்கள் போன்றவற்றை உடனுக்குடன் செலுத்தி கணினிமயமாக்கப்பட்ட ரசீது பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

### *நகராட்சி கணினி கருவுலம்:*

மின் ஆளுமை திறனை பயன்படுத்தி பலதரப்பட்ட வருவாய் இனங்களை நகராட்சி கருவுலத்தில் செலுத்துவதற்கு ஏதுவாக கணினிமயமாக்கப்பட்ட கருவுலம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் நகராட்சி பலதரப்பட்ட வருவாய் இனங்கள் செலுத்தி உடனுக்குடன் கணினி ரசீது பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மின்னனு வசூல் மையம் வசூல் வசதி காரணமாக பொதுமக்கள் தாங்கள் நகராட்சியில் செலுத்தக்கின்ற பணத்திற்கு உடனுக்குடன் கணினி மயமாக்கப்பட்ட ரசீது வழங்கப்படுகிறது.

### *இன்டர்நெட் வசதி:*

இந்த உலகத்தின் எந்த முனையிலிருந்து பலதரப்பட்ட தகவல்களை இந்நகராட்சி தொடர்பாக பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நகராட்சிக்குட்பட்ட நிலுவை வரி, வரியில்லா இனங்களின் தகவல்களை கீழ்கண்ட முகவரியில் இணையதளம் மூலம் தெரிந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

*இணையதள முகவரி:* http://municipalaity.tn.gov.in/sirkazhi

பொதுமக்கள் குறைகள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்க மின் ஆளுமை முகவரி

**commr.sirkazhi@tn.sov,in**

## மழைநீர் சேகரம் அமைத்தல் :

1) இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று குளத்திற்கு மழைநீர் சேமிப்பு திட்டம் மற்றும் நீர் தேங்க கூடிய 80 இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்ய ரூ. 6.85 லட்சம் மதிப்பீடு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் 14.7.2011 அனுப்பப்பட்டு உள்ளது.

2) இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விபரப்படி மழைநீர் சேகரிப்பு அமைப்பு செய்யப்பட்டு உள்ளது

| | |
|---|---|
| தனியார் வீடுகள் | – **5728** |
| வணிக நிறுவனம் | – **1188** |
| தனியார் நிறுவனம் | – **25** |
| குளங்கள் எண்ணிக்கை | – **32** |
| | -------------- |
| | **6973** |
| | – – – – – – |

## பாதாளச்சாக்கடைத் திட்டம் :

இத்திட்டத்தினை விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயார் செய்து வருகிறது.

## *பொது நலமும் , பாதுகாப்பும் :*

குறிப்பிடத்தக்க விபத்து ஒன்றும் நடக்கவில்லை. இந்நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## *வரவின் முயற்சிகள் :*

அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் ‘ பி ‘ வகுப்பாக உள்ளது. அரசாணை எண் 175 உள் (போக்குவரத்து) துறை நாள் 4.3.2002ன் படி கட்டணம் உயர்த்தப்பட்டு பேருந்து ஒன்றுக்கு ரூ. 12/– வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது

அறிக்கை ஆண்டில் பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்வதற்காக ஏலம் விட்டதில் ரூ.5,73,277/– ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 5,45,978/– ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

*சரக்கு உந்தும் நிலையம்* : இல்லை

## *போக்குவரத்து :*

இந்நகராட்சியினால் போக்குவரத்து எதும் நடத்தப்படவில்லை. தனிப்பட்டவர்களாலும், அரசு போக்குவரத்து கழகத்தாலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

## பொதுவரியினங்கள் வரவு கணக்குகள் :

அறிக்கை ஆண்டில் கீழ்குறிப்பிட்டுள்ள வரிவிகிதங்கள் அமுலில் இருந்து வருகிறது. கட்டிடங்களின் ஆண்டு வாடகை மதிப்பின் பேரில் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பொது காரியங்களுக்கு வரி | ... | 6% |
| 2. துப்புரவு பணிகளுக்கு வரி | | 4% |
| 3. விளக்கு வரி | | 6% |
| 4. குடிநீர் வரி மற்றும் வடிகால் வரி | | 4% |
| 5. கல்வி வரி | | 5% |
| | | 25% |

காலி மனைக்கு அவற்றின் மொத்த மதிப்பில் கீழ் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வரிவிதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. பொது காரியங்களுக்கு | ... | ½ % |
| 2. நீரளிப்பு மற்றும் சாக்கடைவரி | | ¼ % |
| 3. விளக்கு வரி | | ¼ % |
| 4. கக்கூஸ் வரி | | ¼ % |
| 5. கல்வி வரி | | ¼ % |
| *மொத்தம்* | | **1.5%** |

## தொழில் வரி :

3.3.94 ம் தேதிய திருத்திய தொழில்வரி சட்டம் 9ன் படி புதிய தொழில்வரித்திட்டம் 11.1.09 முதல் அமுல்படுத்த அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு 26.12.98 ம் தேதிய தமிழ்நாடு அரசிதழில் கீழ்கண்ட விபரத்தின் படி தொழில் வரி நிர்ணயம் செய்து 1998 ம் வருடத்திய தொழில் வரி திருத்திய சட்டம் எண் 59 ன் படி இந்நகராட்சிக்கு 2008–09 ம் ஆண்டு முதல் அரையாண்டிற்கு அதிகபட்சமாக ரூ.975/–மும் குறைந்த பட்சம் ரூ.100/– ம் நிர்ணயம் செய்ய மன்றம் 29.8.08 ம் தேதிய தீர்மான எண்.185 ல் தீர்மானித்ததின் பேரில் 30% உயர்வு செய்து கீழ்கண்ட விபரப்படி தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அரசு அலுவலர்கள் தவிர இதர தொழில் வர்த்தகர்கள் தொழில் வரி செலுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டு வரிவசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| *வ.எண்* | *பணியாளர்களின்* அரையாண்டு வருமானம் | அரை ஆண்டுக்குரிய தொழில் வரி (30.9.2008 முடிய) | *அரையாண்டிற்கான தொழில் வரி விகிதம்* (1.10.2008 முதல்) |
|---|---|---|---|
| 1. | ரூ.21,000க்குள் | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21,001 முதல் 30,000 வரை | ரூ.75/– | ரூ.100/– |
| 3. | ரூ.30,001 முதல் 45,000 வரை | ரூ.190/– | ரூ.250/– |
| 4. | ரூ.45,001 முதல் 60,000 வரை | ரூ.375/– | ரூ.490/– |

| | | | |
|---|---|---|---|
| 5. | ரூ.60,001 முதல் 75,000 வரை | ரூ.565/– | ரூ.735/– |
| 6. | ரூ. 75,000 க்கு மேல் | ரூ.750/– | ரூ.975/– |

## *வரி விதிப்புகள் விவரம் :*

*அறிக்கை ஆண்டில் வரிவிதிப்புகள் விவரம்:–*

**I.** *சொத்துவரி – 7868*

**II.** *தொழில் வரி – 1032*

**III.** *குடிநீர் இணைப்புகள்– 420*

**IV.** *வருவாய் தரதக்க இனங்கள் எண்ணிக்கை*

கடைகள் – 103

வருடாந்திர ஏல கடைகள் – 12

பலன் தரும் மரங்கள் – 246

V. அச்சம் மற்றும் அருவருக்கதக்க தொழில்கள் உரிமங்கள்

எண்ணிக்கை – 476

உணவு கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் உரிமங்கள் எண்ணிக்கை– 379

## *கேட்பு வசூல் பாக்கி :*

## *வரிகள் மற்றும் வரி இல்லா இனங்களின்கேட்பு வசூல் பாக்கி விபரம்:*

| | | கேட்பு | வசூல் | பாக்கி ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| சொத்துவரி | நிலுவை | **39.13** | **18.07** | **21.06** |
| | நடப்பு | **84.57** | **72.98** | **11.59** |
| | கூடுதல் | **123.70** | **91.05** | **32.65** |
| தொழில் வரி | நிலுவை | **12.67** | **1.98** | **10.69** |
| | நடப்பு | **15.54** | **13.77** | **1.77** |
| | கூடுதல் | **28.21** | **15.75** | **12.46** |
| குடிநீர் கட்டணம் | நிலுவை | **0.59** | **0.17** | **0.42** |
| | நடப்பு | **2.96** | **2.16** | **0.80** |
| | கூடுதல் | **3.55** | **2.33** | **1.22** |
| வரியில்லா இனங்கள் | நிலுவை | **25.85** | **15.40** | **10.45** |
| | நடப்பு | **56.69** | **45.77** | **10.92** |
| | கூடுதல் | **82.54** | **61.17** | **21.37** |

***வண்டிகள் விலங்குகள் வரி :***

வில் வண்டிகள் , குதிரை வண்டிகள் விலங்குகளின் மீது விதிக்கப்படும் வரி மூலம் வரவு இல்லை. சென்ற ஆண்டும் வரவு இல்லை.

1. கேளிக்கை வரி வரவு ரூ. 13,000/–
2. முத்திரை கட்டணம் மீதான மிகுவரி வரவு ரூ. 18,00,000/–

***நிதி நிலைமை :***

அறிக்கை ஆண்டில் சாதாரணக்கணக்கின் ஆரம்ப இருப்பு ரூ.7,76,358/– ஆகும். அறிக்கை ஆண்டில் சாதாரணக்கணக்கில் வரவு ரூ.3,19,17,580/– ஆகவும் செலவு ரூ. 3,31,18,304/– ஆகவும் உள்ளது. முடிவு கையிருப்பு(–) ரூ.4,24,366/– ஆக உள்ளது.

***இயல்பான கணக்குகள்*** :

***தணிக்கை :***

அறிக்கை ஆண்டில் 2008.2009 ம் ஆண்டுக்கணக்கு தயாரிக்கப்பட்டு மேற்படி ஆண்டு வரை தணிக்கை முடிவு பெற்றுள்ளது.

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் நிலுவையில் உள்ள பொதுக்கணக்கு, ஆரம்பக்கல்வி கணக்கு, சேமநலநிதி கணக்குகளின் தணிக்கை தடைகள் பின்வருமாறு

| | | ***2008. 2009 வரை*** |
|---|---|---|
| 1. | பொதுக்கணக்கு | 140 |
| 2. | கல்வி நிதி கணக்கு | |
| 3. | சேமநலநிதி கணக்கு | |
| 4. | திட்ட நிதி | |
| | மொத்தம் | 140 |

***அரசு கடன் திரும்ப செலுத்திய விவரம் :***

2010–2011 ம் ஆண்டில் இந்த தலைப்பில் தொகை செலுத்தப்பட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

***குறிப்பு :*** அரசிடமிருந்து சாலை வேலைகள் மற்றும் இதர பணிகளுக்கு பெறப்பட்ட கடன்களில் 2008–2009 ம் ஆண்டிற்கு நிலுவை இல்லை.

***ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் :***

1989.90 ல் இருந்து புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு பெறப்பட்ட கடன் தொகை ரூ. 62,07,760 / ஆகும். மேற்படி கடன் தொகையில் பாக்கி இருந்த தொகை ரூ.51.95 லட்சம் டுபிட்கோவிடமிருந்து பெற்று ஐயுடிபிக்கு திரும்ப

செலுத்தப்பட்டு உள்ளது. இந்த கடன் டுபிட்கோ கடனாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அசல் மற்றும் வட்டிதொகையாக 31.3.2011 முடிய உள்ள காலத்திற்கு 781903/– டுபிட்கோவிற்கு செலுத்தப்பட்டுள்ளது.

## *நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ( எம்.யு.டி.எப்) :*

இந்த திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் தொகை ரூ.53,45,500/– சென்ற ஆண்டில் ரூ.27.80லட்சம் டுபிட்கோவில் பெற்று அசல் மற்றும் வட்டி செலுத்தப்பட்டு உள்ளது.31.3.2011 முடிய அசல் மற்றும் வட்டி ரூ.4,76,512/–செலுத்தப்பட்டுள்ளது.

## *சொத்தும் பொறுப்பும் :*

நகர்மன்றத்தின் பொறுப்பு கடன் இவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் ஆண்டுக்கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. 31.3.2011 ல் கொடுபடவேண்டிய நிலுவை, ஓய்வூதியதாரர்களின் நிலுவை , பணிக்கொடை ஆகியவை நிலுவை ஏதும் இல்லாது வழங்கப்பட்டுள்ளது. தணிக்கைக்காக பிடித்தம் செய்யப்பட்டது. அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி நிலுவை இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுவிட்டது.

## *வருவாய்* :

இந்த ஆண்டில் வரியினங்களின் வசூல் எதிர்பார்த்த அளவு சிறப்பான முறையில் சொத்து வரி Collectate Demand ல் 92.00 % வசூல் செய்யப்பட்டுள்ளது. (Overall Collection Arear 46%, Current=84%, Total- 72%)

## *நிதிநிலைமை :*

2010–2011 சாதாரணம் மூலதனம் ஆகியவற்றின் வரவு செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | *சாதாரணக் கணக்கு* | *மூலதனக்கணக்கு* |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஆரம்ப இருப்பு | 7,76,358 | |
| வரவு | 3,19,17,580 | |
| செலவு | 3,31,18,304 | |
| இறுதி இருப்பு | (–) ***4,24,366*** | |

ஆண்டின் முடிவில் எல்லா தலைப்புகளிலும் உள்ள முடிவு இருப்பு மூலதனம் உள்பட ரூ. 6,95,29,223/– ஆக இருந்தது. மூலதன இருப்பு இறுதி இருப்பாக கருத இயலாததால் பொதுவாக நகர் மன்றத்தின் நிதிநிலைமை பற்றாக்குறையாகவே உள்ளது. நிதிநிலைமை ஓரளவு திருப்திகரமாக இருந்தாலும் இனிவரும் காலங்களில் நிதி பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பு

உள்ளது. எனவே வருவாயை பெருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

***முடிவுரை.***

2010–2011–ம் ஆண்டு சீர்காழி நகராட்சி மன்றத்தின் நிர்வாகம் திருப்திகரமாக இருந்தது.

பொதுமக்களுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் தேவைக்கேற்ப உரிய முறையில் திருப்திகரமாக செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களும் பொதுமக்களுக்கு செய்து கொடுக்க வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான திட்டப்பணிகளுக்குத் தேவையான நிதியுதவிகள் வழங்கியும் நகராட்சி நல்ல முறையில் செயல்படவும் ஒத்துழைப்பு கொடுத்து அறிவுறைகள் வழங்கி வருகிறார்கள். மேலும் நகர் மன்ற தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் ஆலோசனையுடன் நகராட்சி அலுவலர்களின் முழு ஒத்துழைப்புடன் நகராட்சிகளின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நிர்வாகப்பொறுப்புகளையும், கடமைகளையும் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டதற்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை பணிவுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*நகராட்சி அலுவலகம்,*
*சீர்காழி.*

*ஆணையர்,*
*சீர்காழி நகராட்சி.*